Registered as a News Paper in Ceylon
P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஞு (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது
தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சுஎ] யாழ்ப்பாணம்:- மன்மதஞு வைகாசிமீ உ0உ வெள்ளிக்கிழமை (3 JUNE 1955) [இல - கூ]

## போர்த்துக்கேயருக்கு முறையான புத்திமதி

இந்திய தேசிய மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ யூ. என் தேபார் அவர்கள் பம்பாயில் சங்கிலி என்னும் இடத்தில் பேசும்போது அன்னியர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறக் கோவா மக்கள் போராடுவது பிழையல்லவென்றும் போர்த்துக்கேய அரசாங்கம் எல்லை கடந்து அடக்குமுறைக் கொடுமைகளைச் செய்தால் இந்தியா கண்மூடிக்கொண்டிருக்க மாட்டாதென்றும் இந்தியாவில் அன்னியருக்கு ஒரு அடி நிலம்தானும் இருப்பதை இந்தியா சகிக்க மாட்டாதென்றும், போர்த்துக்கேயர் பெரும் பிழைகளைச் செய்துவந்தால் அவற்றின் விளைவுகளுக்குப் போர்த்துக்கேய அரசாங்கந்தான் பொறுப்பென்றும் எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

காப்பியக் கலைக்கா

# ......... வீரத்தை மதிக்கும் வீரத்தின் அழகு

## அறத்திற்காகப் போராடிய ஆற்றலின் சிறப்பு

—மதுரை— திரு நா. பார்த்தசாரதி

**அக்ககுமரன் அழிவு**

ஆத்திரத்துடனும் ஆவேசத்துடனும் சென்ற படைத் தலைவர் ஐவரும் மண்ணோடு மண்ணாக அழிந்து போயினர் என்று கேட்ட இராவணன் சினப் பெருமூச்சுக் கனல்போல வெளிவரக் கிளர்ந்து எழுந்தான்.

"கேட்டலும் வெதுளி வெந்தீக்
கிளர்ந்தெழும் உயிர்ப்பனுகித்
தோட்டலர் தெரியல் மாலை
வண்டொடும் சுறுக்கொண்டேற
ஊட்டரக் துண்ட போலு
நயனத்தான் ஒருப்பட்டானைத்
தாள்துணை தொழுது மைந்தன்
தடுத்திடை தருதி என்றன்"
(அக்க குமாரன் வதை—1)

உயிர்ப்பு—மூச்சு
தோடு—இதழ்கள்
ஊட்டு—ஊட்டிய
தருதி—தருவாயாக

என்று இவ்வாறு மூண்ட பெருஞ் சினத்துடன் எழுந்த இலங்கையர் வேந்தனை அவன் மகனாகிய அக்ககுமரன் தடுத்துத் தானே போருக்குச் செல்ல இடந் தருமாறு வேண்டிக் கொண்டான். "உம் போன்ற பெருவேந்தர் போர் செய்யத் தகுதி நோக்கின் தேவர்களில் மூவராகச் சிறந்த கடவுளரே எதிர் நிற்கத் தக்கவர். அவரில்லையாயின் அவருடைய ஊர்திகளாகிய நந்தி, அன்னம், ஆதிசேடன் என்னும் விலங்குகளோடு போர் செய்ய நேர்ந்தாலும் ஒருவாறு தகும். ஒன்றுமற்ற இந்த வெறுங் குரங்குடன் போர் செய்தல் கேவலம், எனவே அப்பணி எனக்குரியது" என்று கூறிப் புறப்பட்டான் அட்சகுமாரன். 'குரங்கு என்ற பெயருக்குரிய கருவினைக்கூட அழிப்பேன்' என்ற பிரதிக்ஞையோடு அனுமனுக்கு முன் சென்றான் அவன். அனுமனோ இவனை இலட்சியம் செய்ததாகவே தெரியவில்லை, மிகக் குறைந்த நேரமே போர் நடந்தது. அதற்குள் அரக்கர் படையைச் சேர்ந்த பலர் புறங்காட்டி ஓடத் தலைப்பட்டுவிட்டனர். அக்ககுமரன் அனுமானால் அழிக்கப்பட்டபின் எஞ்சியிருந்த படையும் தடுமாறி நிலை குலைந்து ஓடிவிட்டது. அனுமன் வெற்றி பெற்றான்.

"தீண்டாடித் திசை யறியா
மறுகினர்
செற்றார் சிலர் சிலர்
சேலவற்றார்
கண்டார் கண்டதோர்
திசையே விசைகோடு
கால்விட்டார் படை
கைவிட்டார்" (39)

மறுகுதல்—மயங்குதல்
செற்றார்—சினமுற்றார்
விசைகொடு—வேகங்கொண்டு
கால்விட்டார்—ஓடினார்.

செய்தி கேட்டு அக்ககுமரனைப் பெற்ற தாயாகிய மந்தோதரி கண்ணீர்விட்டு உயிர் மாழ்கி அழுது அரற்றினாள். தத்தம் கணவரும் சகோதரரும் ஆகிய அரக்கர்களைக் களத்தில் இழந்த அரக்கியர் புலம்பல் ஒலி எங்கும் மிகுந்தது. நேர்மைக்கும் தருமநாயகனுக்கும் துணைசெய்யப் போராடுகின்ற ஒரு மகாசக்திபோல அனுமன் நின்றான். அனுமன் ஆவேசத்தில அறத்திற்காகப் போராடும் ஒருவகை அற்புதமான அழகும் இருந்தது.

**சிறைப்பட்ட சிங்கம்**

அக்ககுமரனின் அழிவுச் செய்தியை இந்திரசித்து அறிந்தபோது கண்களில் வெகுளி பொங்க உள்ளத்திற் சினங் கிளர ஆவேசமுற்று எழுந்தான். தேவர்களும் மூர்த்திமர் மூவருங்கூட அஞ்சி நடுங்கினர் அவன் ஆவேசங் கண்டு. தம்பியான அட்சகுமரனைக் கொன்ற குரங்கைப் பழி வாங்கும் எண்ணம் முற்றித் தழும்பேறிவிட்டது அவனுடைய முரட்டு மனத்தில். இராவணன் இருப்பிடம் சென்று நடந்தவற்றைக் கூறி விடைபெற்றபின் போருக்குச் செல்லுகின்றான் இந்திரசித்து. அனுமனுடைய வீரத்தை உளளூற இந்திரசித்தும் பாராட்டிக்கொண்டே போர்க்களம் சென்றான் என்று கம்பன் "வீரத்தை மதிக்கும் வீரத்தின்" அழகைச் சொல்லி யுள்ளான்.

"நன்றது கண்ட வா்ழி அனுமனை
அமரின் ஆற்றல்
நன்றென உவகை கொண்டான்
யாவரும் நடுக்கமுற்றார்"
[பாசப் படலம்—15

அசோக வனத்தின் சமீபமாக நெருங்கிச் சென்ற இந்திரசித்து அங்கே குவிந்திருக்கும் பிணக் குவியலைக் கண்டு பன்மடங்கு சினந்தான் — சீறினான். இறந்துகிடந்த தன் தம்பியின் சடலத்தைக் கண்டு கண்ணீர் விட்டுப் புலம்பினான். இந்திரசித்தின் வரவு கண்ட அனுமன், "இவன்தான் திறமையில் உயர்ந்த இந்திரசித்து என்பவன்போலும். இவனோடு இப்போது செய்யப்போகும் போரில்தான் நம்முடைய உண்மையான வெற்றியும் தோல்வியும் இருக்கிறது" என்று தனக்குள் எண்ணிக்கொண்டான். போரும் தொடங்கிற்று. அனுமன் அரக்கர் படைக்கு மிகுதியான அழிவைக் கொடுத்தான் முதலில். படைகளும் இந்திரசித்துமாக அனுமனின் மேல் எறிந்த படைக்கலங்கள் அவனை ஏதும் செய்யாது வீணாக வீழ்ந்தன. இறுதியில் அனுமனும் இந்திரசித்தும் நேருக்கு நேர் நின்று போரிட வேண்டிய நிலை ஏற்பட்டது. அனுமன் தன் பேருருவத்தை வெளிக்காட்டி இந்திரசித்தை வியப்புக் கடலில் ஆழ்த்தினான். முதலில் அனுமனை தோல்வி முகமின்

தொடர்ச்சி [illegible] பக்கம்

# புத்தளம் முத்தமிழ் விழா

சுதந்திர ஈழத்தில் அரசினர் தாய்மொழிக்கு முக்கியத்துவம் அளித்து வரும் இந்நாளில் எமது தாய்மொழியாம் தமிழ்மொழி — பழமையும், வழமையும் பெற்ற தேனமொழி — எத்திசையிலும் பரவச் செய்தல் எம் கடமையாகும்.

எமது தாய்மொழித் தொண்டால் அனைவரையும் ஒன்று சேர்ப்பதையே நோக்கமாகக்கொண்டு புத்தளம் முத்தமிழ்மன்றத்தின் சார்பாக அதன் கௌரவ தலைவர் அல் ஹாஜ் H S இஸ்மாயில் M, P.; M, B, E, மக்கள் சபையின் உபசபாநாயகர் அவர்களின் தலைமையில் நியமிக்கப்பட்ட நிர்வாகக் குழு புத்தளப் பிரிவின் தமிழ்ப் பேசும் பல சமயத்தவர்களையும் சாதியத்தவர்களையும் ஒருங்கு சேர்ந்த ஆரம்ப முத்தமிழ் விழாவொன்றை, அதி விமரிசையாக 3-7-55, 4-7-55 ஆகிய தேதிகளில் கொண்டாடத் தீர்மானித்துள்ளனர். இவ்விழாவில் சகல அன்பர்களும் கலந்துகொள்ள வேண்டுமென்பது எங்கள் வேணவாவாகும்.

மேற்படி விழாவில் தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரும் ஒருங்குசேர்ந்து ஆதை ஆதரிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஏனைய பாஷைகள் பேசும் அன்பர்களும் பெரியார்களும் பேருவகையுடன் வரவேற்கப்படுவர் என்றும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புத்தளப் பிரிவின் பல பாகங்கட்கும் பணம் அறவிடும் பத்திரங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அவ்வப் பிரிவைச் சேர்ந்த அன்பர்கள் இயன்றளவு பணத் தொகைகளை இடுமாறும் அதைக் குறிக்கப்பட்ட தினத்தில் தனாதிகாரிக்கு அனுப்புமாறும் வேண்டுகிறோம். ஏனைய பிரிவைச் சேர்ந்த அன்பர்கள் அனுப்பும் பணத்தொகைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

எங்கள் விழா சம்பந்தமான நிகழ்ச்சிநிரல் கூடிய விரைவில் வெளியிடப்படும் என்று விழாக்காரியதரிசி ஸ்ரீ S. M. M. காசீம் J. P. U. M. (முடிக்குரிய வழக்கறிஞர், புத்தளம்) அறிவித்திருக்கின்றார்.

## அப்—பாக் பிணக்கு

அப்கானிஸ்தான் பாக்கிஸ்தான் பிணக்கைத் தீர்ப்பதற்கு சவுதி அரேபியா செய்த நடுநிலைமை முயற்சி சித்தியெய்தவில்லையாம். இப்பொழுது எகிப்து முயலுகின்றது.

## யாழ்ப்பாண நகரசபைக் காரியாதிகாரி

யாழ்ப்பாண நகர சபைக் காரியாதிகாரிக்கும் நகரசபைத் தலைவருக்குமிடையில் உண்டான சமாதானம் காரணமாய் காரியாதிகாரி மீது சாட்டப்பட்டகுற்றங்களின் விசாரணை நிறுத்தப்பட்டுவிட்டது. காரியாதிகாரி திரு. கே. சண்முகம் வேறு நகரசபைக்கு மாறிப் போவாராம்.

## வேற்றுமை நீக்குதற்குக் கூட்டு வாழ்க்கை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க விருந்தொன்று கொழும்பில் தலைமை ஆசிரியர் திரு. வி. எம். ஆசைப்பிள்ளை அவர்கள் தலைமையில் சென்ற சனிக்கிழமை நடந்தது.

அத்தருணம் நிதிமந்திரி ஸ்ரீ எம். டி. எச். ஜயவர்த்தன அவர்கள் பேசும்போது அவ்விருந்தில் ஒன்றாக இருந்தது போல் நாங்கள் யாவரும் ஒன்றாகக்கூடி வாழ்ந்தால் வேறுபாடுகள் நீங்கிவிடும் என்று கூறினார்.

சர்வகலாசாலைத் துணைவேந்தர் சேர் நிக்கலஸ் ஆற்றிகல, தலைமை ஆசிரியர் திரு. வி. எம். ஆசைப்பிள்ளை இந்துக் கல்லூரி அதிபர் திரு. ரி. முத்துச்சாமிப்பிள்ளை முதலியோரும பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழக அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ், மன்மத ஹு வைகாசி மூ
௨௦ ௨ வெள்ளிக்கிழமை

## ஆய்ந்து அமைக்கப்படாத திட்டம்

அரசாங்க உத்தியோகத்தர்களில் ஒரு வகுப்பினராவது வேதனவுயர்ச்சியை மனமுவந்து வரவேற்றிருப்பதாகக் காணப்படவில்லை. அவ்வளவில் அமையாது ஒரு சாரார் இன்னொரு சாரார் நன்மை பெற்றிருக்கின்றார்கள் என்றும் பொதுவாகஒரு ஒப்புவலம உயர்வு கொடுக்கப்படவில்லையென்றும் குறை கூறுகின்றார்கள். இலிகிதர்களாகவுள்ளோர் முன்போல இன்னமும் கண்டனப் பிரசாரஞ் செய்த வண்ணமாக இருக்கின்றனர். தாய்மொழியிற் பயிற்றும் ஆசிரியர்கள் என்றும் போல் இப்பொழுதும் மதிக்கப்படாது ஒதுக்கி வைக்கப்பட்டார்கள்என்று மனம் வருந்துகின்றார்கள். இவ்வாறு எழுந்திருக்கும் கண்டனத்தில் ஒரு வகையில் நியாயம்உண்டென்றே சொல்லுதல் வேண்டும்.

வேதனம் அமைப்புத் திட்டம் பல்வேறு பகுதியாளருக்கும் அடிப்படையாகவுள்ள தராதரம் கல்வியறிவு ஆற்றல் பொறுப்பு என்ற இன்னோரன்ன தன்மைகளாற் கணிக்கப்பட வேண்டியது அத்தியாவசியம். தாய்மொழியிற் பண்டிதராய்ப் பல்லாண்டுகளாக தொன்னூல் யாவும் ஆராய்ந்து முறைப்படி கற்றுத் தேறியவர்களுக்கு தமிழ் சிங்கள ஆதிக்ககாலத்திலும் மதிப்பு இல்லையென்றால் இதைவிடக் கவலைக்கிடமான தொன்று பிறிதுளதுகொல். இந்த வகையிலே முன்பு வழங்கி வந்த தராதர வேற்றுமை இப்பொழுதும் நிலைநாட்டப்படுதல் அநீதியன்றோ? ஆசான் ஆக அமைந்துள்ளவர் தன்னயங் கருதாது பணியாற்றுதல் மரபாகவுண்டெனினும் குருவென்றவகையிலுள்ள மாண்புடையவராக விருத்தற்குப் பொருள் வேண்டும் அல்லவா? எனவே வேதனத் திட்டத்தின் அடிப்படையான அமைப்பு தொழில் மரபுக் குகந்ததாக மாற்றி வைக்கப்படுதல் வேண்டும் என்பது உண்மையான கூற்றுகின்றது.

ஆசிரியல் வரி:

# அலுத்துவற காட்டும் அநுபவம்

## ஏமாந்த எதிர்க்கட்சிச் சோணகிரித் தோழர்கள்

கண்டி புத்தளம் எனனும் இடங்களில்கண்டமுடிவே அலுத்நுவறவிற்பெற்ற அனுபவமாய் விட்டது. விடுதலைக் கட்சியும் பொதுவுடைமைக் கட்சியும்படுகுழியில்வீழ்ந்து விட்டன. சமசமாசக்கட்சி சமாளித்து விட்டது. சுருங்கச் சொல்லுகில் எதிர்க்கட்சித் தலைவர்களே ஐக்கிய தேசியக் கட்சி ஆதிக்கத்தை நிலைநாட்டுகின்றார்கள்.

தோழர்கள் வீழ்ந்துவிலை யில் மண்படவில்லை என்று சொல்லித் தங்களைத் தட்டிக் கொடுக்கின்றார்கள். திரு. பண்டாரநாயகவின் பதவி வேட்டை பகற் கனவாய் முடிந்துவிட்டது. சமசமாசக் கட்சியினர் புரட்சிக் கோலத்தைப் புறக்கணித்தால் மக்களின் ஆதரவைப் பெறக்கூடிய மதிப்புடனிருப்பார்கள். தோழர்களின்' கொண்டாட்டத்தை முற்றாக விலக்கி நின்றால் சமசமாசக் கட்சியின் எதிர்ப்புப் பயன் அளிக்கும் என்பதற் கையமில்லை.

### அமெரிக்க ஆகாய விமானிகளின் விடுதலை

நற் பண்பாடுடையவர்களே நடுநிலைமை வகிக்ககூடியவர்கள். அரசியலில் அநுபவமும் ஆற்றலும் சான்றாண்மையுமுள்ள அமைச்சர்களே நடுநின்று விவகாரங்களைத் தீர்க்க வல்லவர்கள். இந்த உண்மை பாரதப் பண்பாட்டின் அடிப்படையான தகைமை என்பதைச் சீனவிலே சிறைபிடிக்கப்பட்ட அமெரிக்க ஆகாய விமானிகளின் விடுதலைப் போராட்டததில மிகவும் பரிந்து வேலைசெய்த நேருப் பெரியாரின வெற்றி நிரூபித்து விட்டது. செஞ்சீனவும் நேருப் பெரியாரின் புத்திமதிகளை ஏற்றுக் கொண்டதால் உலக மதிப்புப் பெற்றுவிட்டது. வல்லரசுகள் தங்கள் விவகாரங்களைப் பாரதப் பிரதமரின் தீர்ப்புக்கு விட வேண்டிய காலம் விரைந்து வருகின்றது.

# அநாதர் விடுதிக்கு உதவும்படி சைவ மக்களுக்கு வேண்டுகோள்

## சைவ வித்தியா விருத்திச் சங்கப் பொருட்காட்சி

சென்ற திங்கட்கிழமை இரவு திருநெல்வேலியில் கல்வி மந்திரி ஸ்ரீ. எம். டி. பண்டா சைவவித்தியா விருத்திச் சங்கப் பொருட்காட்சியைத் திறந்து வைத்தார். அவர் பேசும்போது "சைவவித்தியா விருத்திச் சங்கத்துக்கும் அதன் அநாதர்கள் விடுதிக்கும் அவற்றின தன்னலமற்ற ஊழியர்களுக்கும் உதவி செய்ய வேண்டியது ஒவ்வொரு சைவரினதும் கடமையாகும்", என்று கூறினர்.

வரவேற்புச் சபைத் தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம மந்திரியை வரவேற்றுப் பேசுகையில் சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் 33 வருட கால சரித்திரத்தை எடுத்துக் கூறினர்.

இந்து சமூகத்துக்கு அது ஆற்றிவரும சேவையைப்பற்றி அவர் எடுத்துக் கூறுகையில் இன்று இலங்கையிலுள்ள மிக ஏழ்மையான சங்கம் இதுதானென்றும் சைவ மக்கள இதற்கு நிதியுதவி அளித்து ஆதரிக்க வேண்டுமென்றும கேட்டுக்கொண்டார்

இந்த அநாதர்கள் விடுதிக்கு நிதி திரட்டுவதற்குக் களியாட்ட விழா ஒன்று நடத்துவது நல்லதென்று கூறப்பட்ட யோசனைகளைச சங்கம் கைவிட்டுவிட்டதென்றும் ஏனென்றால் குடியுஞ் சூதாட்டமும் அங்கு முக்கியமாக இடம் பெறுமாதலால் பிள்ளைகளின் ஒழுக்கத்தைக்கெடுத்துப் பணம் தேட்டுவது தங்களுடைய லட்சியத்துக்கு மாறானதென்றும அதன் காரணமாக அந்த யோசனை கைவிடப்பட்டதென்றும அவர் மேலும் சொன்னர்.

சைவ வித்தியா விருத்திச் சங்கக் காரியதரிசி நியாய துரந்தரர் திரு. எஸ். இராசரத்தினம் அடுத்தபடியாகப் பேசுகையில் இந்து சமூகத்துக்குச் சேவை செய்வதனோக்கமாகவே இச் சங்கம் அமைக்கப்பட்டதென்று சொன்னர்.

### திறப்பு விழாவும பிரசங்கமும்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிகார சபையின் கிளை வித்தியாசாலைகளில் ஒன்றாகிய காரைநகர் இலகடி சைவத் தமிழ்ப் பாடசாலைப் புதிய கட்டடத் திறப்பு விழாவை, வருகிற சனிக்கிழமை (4-6-55) மாலை 6மணியளவில், ஷெ பாடசாலையின அதிபரும், முடிக்குரிய நியாய துரந்தரருமாகிய திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள செய்து வைப்பார்கள்.

அதன பின், அவர்களே தலைமைவகிக்க, யாழ்ப்பாண சைவ பரிபாலன சபையின் ஆதரவில் "காரைக்காலம்மையார்" என்னும விஷயமாக, முத்தமிழ்ப் பெருஞ்சொற் கொண்டல், புரிசை சு. முருகேச முதலியாரவர்கள் சிறந்த இன்னிசைப் பிரசங்கம் செய்வார்கள்.

## தமிழ்மறைக் கழகத்தின் மூன்றாவது திருக்குறள் மகாநாடு

வைகாசித்திங்கள் ௨௦, ௨௧, ௨௨ (3, 4, 5-6-55) ஆம் நாட்களாகிய வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில், அனுராசபுரத் தமிழ்க் கழகத்தின் ஆதரவில் அனுராசபுரம் விவேகானந்தசபைமண்டபத்தில்ஷை மகாநாடுநடைபெறும். அமைச்சர்உயர்திரு.சு.நடேசன் அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைப்பார்கள்.

3-6-55 வெள்ளிக்கிழமை பி. ப. 3 மணி தொடக்கம் திரு. ம. பொ. சிவஞான கிராமணியார், மகா வித்துவான் ச. தணடபாணி தேசிகர், பேராசிரியர் க. ச. அருணந்தி, வித்துவான் நீ மே யோ வேதநாயகம், வித்துவான் எஸ். ஜெகனுதாச்சாரி, பண்டிதர் செ. துரைசிங்கம், பண்டிதர் சோ. இளமுருகனுர், புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை, பண்டிதர் மு. ஆறுமுகம், புத்தகுரு பண்டிதர் தருமரத்தின தேரோ, திரு. எஸ். எம். கமாத்தீன், பண்டிதர் சபா. ஆனந்தர், திருமதி சத்தியதேவி துரைசிங்கம், வித்துவான் தியாகராச தேசிகர், வித்துவான் பொன் முத்துக்குமாரன் ஆகியோர்சொற்பொழி வாற்றுவார்கள் என அநுராசபுரத் தமிழ்க் கழகத் தலைவர வைத்திய கலாநிதி மு. வேதாரணியம், செயலாளர் வ. சி. சுப்பிரமணியம் ஆகியோர் அறியத்தருகின்றனர்.

### யாழ்ப்பாணச்

# சைவபரிபாலனசபை ஆதரவில் இன்னிசைப் பிரசங்கங்கள்

இப்பத்திரிகையிற்சென்ற கிழமை வெளியீட்டில் தெரிவித்தபடி முத்தமிழ்ப் பெருஞ்சொற் கொண்டல் புரிசை சு. முருகேசமுதலியாரவர்கள் சென்ற வெள்ளிக்கிழமை இரவு(27-5-55) மேற்படிசபை ஆச்சிரம மண்டபத்தில் அருச்சுனன் தவநிலை இரண்டாம் பாகத்தை ஆயிரக்கணக்கான சனங்கள் முன்னிலையில் இனிய இசைப் பிரசங்கமாகச் செய்தனர். அடுத்த நாளாகிய (28-5-55) சனிக்கிழமை இரவு மேற்படி மண்டபத்திலேயே காந்த புராணத்தில் உள்ள பர்வதன் தவத்தால் பார்வதி தோன்றுதல் என்பது பற்றியும், ஞாயிற்றுக்கிழமை (29-5-55) கண்ணுதல் பார்வையாற் காமன் பொடிபடல் என்னும் விஷயமாகவும் அடுத்த தினம் (30-5-55) இரவு அம்மையப்பர் அருள்மிகு திருமணம் என்பது பற்றியும, செவ்வாய்க்கிழமை 31-5-55 அண்ணலபால முருகவேள் திருவவதாரம் என்னும் பொருள் பற்றியும் சிறந்த இசைப்பிரசங்கங்கள் செய்தார்கள்.

மேலும் (1-6-55) புதன்கிழமை இச்சபையின் ஆதரவில் சுளிபுரம பறுளாய் சுப்பிரமணிய சுவாமி கோயில மண்டபத்தில், 8ம திருவிழா உபயகாரராகிய திரு. சி. சேதுகாவலப் பிள்ளையின் கேள்விப்படி மாலை6மணிதொடக்கம வள்ளிநாயகிதிருமணம்என்னும விஷயமாகவும், அன்றிரவு 9 மணி தொடக்கம மேற்படி சபை ஆதரவில் வேலணை மேற்கு முடிப் பிள்ளையார் கோவில் 7-ம் திருவிழாப்போது அத்திருவிழாவின் உபயகாரராகிய திரு. சி. ம. கணபதிப்பிள்ளையின் கேள்விப்படி ஐங்கரக்கடவுள் திருவிளையாடல் என்னும் விஷயமாகவும் அரிய இசைப் பிரசங்கம் செய்தனர். முதலியாரவர்கள் இன்னும் இரண்டு மூன்று வாரங்கள் யாழ்ப்பாணத்திலே, சபை ஆசிரம மண்டபத்திலும், வேறு இடங்களிலும் சைவசமய சம்பந்தமான இனிய இசைப் பிரசங்கங்களைச் செய்வார்கள்.

### சங்காபிஷேகமும் பிரசங்கமும்

சுளிபுரம் பறுளாய் சுப்பிரமணியசுவாமி கோவில் 8—ம் திருவிழாத் தினமாகிய புதன், (1-6-55) பகல் அஷ்டோத்தர, சதகலச சங்காபிஷேகமும், விசேஷஉற்சவமும் இரவு முத்தமிழ்ப் பெருஞ்சொற் கொண்டல புரிசை சு. முருகேச முதலியாரால வள்ளிநாயகி திருமண இன்னிசைப்பிரசங்கமும் பின சப்பாத திருவிழாவும் திரு. சிவலோகர் சேதுகாவல பிள்ளையின் உபயமாகச் சிறப்பாக நடைபெற்றன.

### அமெரிக்கசீனப் பிணக்கில் இந்தியாவின் இணையற்ற தொண்டு

பதினொந்து அமெரிக்க விமானிகளைச் சீன சிறையில் வைத்திருப்பது காரணமாய் உலக நெருக்கடியொன்று உருவாகி வந்துள்ளது. இந்திய தூதுவர் ஸ்ரீ வி.கே. கிருஷ்ணமேனனது சாதுரியமான பேச்சால் அவர்களுள் நால்வர் விடுதலை பெறுகின்றனர். இவ் விமானிகளின் குடும்பத்தினராகியோர் இது கடவுளின் செயலே என்று ஆனந்திக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகுக்கு உயிராகியவன் அரசன்

## நூலறிவு நுண்ணறிவோடு சிறந்த பண்பாடுடையோரே அமைச்சர்கள்

### அரசர்கள் அமைச்சர்கள் சிறப்புறுதற்கு வேண்டும் இலக்கணங்கள்பற்றி பண்டைத்தமிழ் நூல்கள்

இற்றைக்கு ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர் இத்தாலி தேசத்தைச்சேர்ந்த 'மெக்காவிலி' என்ற பெருஞ்செல்வன் 'அரசன்' என்ற பெயரில் ஒரு நூலை எழுதினன். அரசனுக்குரிய இலக்கணம், ஆட்சி முறை என்பன அந்நூலில் ஓரளவு கூறப்பெற்றுள்ளது உண்மையே. ஆனல் அதைவிட மிகுதியாக எத்தகைய சூழ்ச்சிகளிழைத்தால் ஒருவன் அரசனுக முடியும் என்பதையே இந்நூல் பேசிற்று. மிகச் சமீப காலம்வரை இந்நூல் ஈடு இணையற்றதாக ஐரோப்பா தேசம் முழுவதிலும் விளங்கி வந்தது.

ஆனல் மெக்காவிலி தோன்றுதற்கு ஆயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முன்னரே இத்தமிழ்நாட்டில் ஒப்பற்ற அரசியல் நூல்கள் தோன்றின. அத்தகைய நூல்களுள் திருக்குறளும் ஒன்று என்று கூறத் தேவை இன்று. திருக்குறள் அல்லாத ஏனைய தமிழ் நூல்களிலும் அரசியல்பற்றிய பல கருத்துக்கள் மிகுதியாகப் பேசப்பட்டுள்ளன. அரசியல் கருத்துக்களை அறிவிப்பது அவற்றின் தலையாய நோக்கமல்லவாகலின் இலைமறை காயாக இவ்வுண்மைகள் அப்பாடல்களில் அமைந்துள்ளன.

அரசாட்சியில் அரசனுக்கு அடுத்தபடியில் நிற்பவன் அமைச்சனேயாவான். மிகப் பழங்காலத்தில் அரசனை உலகின் உயிரென்று கருதப்பெற்ற காலத்திற்கூட அமைச்சனை அரசனுடைய கண்களாகவே கருதினர். உலகப்பொதுமறை தந்த பெரியார் "சூழ்வார் கண்ணாக ஒழுகலான மன்னவன், சூழ்வாரைச் சூழ்ந்துகொளல்" (445) என்று விதித்துப் போனர்.

மெக்காவிலி தம் நூலின் 22ம் பிரிவில் அரசன் அமைச்சரைத் தேர்ந்தெடுப்பதுபற்றிக் கீழ்வருமாறு குறிக்கிறார். அமைச்சரைத்தேர்ந்தெடுப்பது எத்துணை பெரியகாரியமென்று கூறத் தேவை இன்று. மன்னனின் அறிவு விளக்கத்திற்கேற்பவே அமைச்சரைத் தேர்ந்தெடுப்பான். அறிவுடை அமைச்சரைத் தேர்ந்தெடுப்பவன் அறிவுடை மன்னனுகக் கருதப்படுவான். அமைச்சனுடைய தகுதியை மன்னன் அறியச் சிறந்த வழி ஒன்றுண்டு. எப்பொழுது ஒரு அமைச்சன் மன்னனைக் காட்டிலும் தன்னைப் பெரிதாக மதிக்கிருனே, அப்பொழுதே அவன் அத்தொழிலுக்குத் தகுதியற்றவனுகிருன். எவன் ஒருவன் அனைத்திலும் தன்னுடைய ஊதியத்தைப் பெரிதென மதிக்கிருனே அவனும் அமைச்சனுக ஆகத் தகுதியற்றவன. ஒருமுறை அமைச்சனு-

அ. ச. ஞானசம்பந்தன் M. A.

-டைய தகுதிபற்றி மன்னன் ஆய்ந்து தெளிந்து அவனுடைய உண்மை அன்பை அறிந்துவிட்டால் பிறகு அவன் அன்பை நிலைபெறச்செய்யத் தக்கனவற்றை இயற்றவேண்டும். மேலும் பொறுப்புக்களையும் பதவியையும் பணத்தையும் தருவதால் அமைச்சனுடைய அன்பு மாருமல் இருக்கச் செய்ய வேண்டும். இத்தகைய முறையில் இருவரும நடந்துகொண்டால் இருவரும் பெறுத நன்மையும் இல்லை. இம்முறை மாறினுல் இருவரும் அடையும் தீமைக்கும் ஓரளவில்லை.

இத்தாலிய நாட்டு அரசியல் ஞானி கூறின இவற்றைக் காட்டிலும் சிறந்த பல உண்மைகளைத் தமிழர் இரண்டாயிரம ஆண்டுகட்கு முன்னரே கண்டுள்ளமுறையில் சற்று விரிவாகக் காணலாம். அமைச்சரையும், அவரது தொழிலையும் எத்துணைச் சிறப்பாகத் தமிழர் கருதினர் என்பதை இவ்வமைச்சரைக் குறிப்பிடும்பொழுது கொடுத்த அடைமொழிகளாலேயே ஒருவாறு அறியலாம். 'நூலறிபுலவர்' (சிலம்பு 25, 116) என்றும் 'நுணங்குபொருள் அமைச்சர்' (பெருங்கதை பக். 650) 'நுண்மதியமைச்சர்' (பெ. 302) நுண்வினையமைச்சர் (பெ. 415) தெரிமதியமைச்சர் (422) நூல்வல்லாளர் (பெ. 469) என்றும் நூல்கள் நுவல்கின்றன.

இவ்வடைமொழிகளிலிருந்து அறியப்படுவதொன்றுண்டு. பல்வகை மக்களொடும் பழகவேண்டிய கடப்பாடுடைய அமைச்சன் கூறிய அறிவுடையவனாக இருத்தல் வேண்டும். ஒருவர் பேசும் பேச்சுக்களிலிருந்துமட்டும் அவருடைய மனநிலையை அறிதலென்பது இயலாத காரியம். 'மெய்யுடை ஒருவன் சொல்லமாட்டாமையால் பொய்போலும்மே, பொய் போலும்மே' என்ற முதுமொழியையும் அதன் எதிர்மொழியையும் அமைச்சன் கவனத்திற்கொள்ள வேண்டும். பேசுவோர் சொற்களைமட்டும்கொண்டு முடிவு செய்யாமல் அவர் முகக்குறிப்பு முதலியவற்றைக்கொண்டு உண்மைகாண முயலவேண்டும். இவற்றை எல்லாம் மனத்துட் கொண்ட ஆசிரியர் 'தொழுதகையுள்ளும்படை ஒடுங்கும் ஒன்னர் அழுத கண்ணீரும் அனைத்து' (828) என்று கூறினர். எனவே பிறருடைய அழுகையைக் கண்டு ஏமாந்துவிடக்கூடாது என்பதையும் அறிவித்தார் ஆசிரியர். இதன் மறுதலையாகக் கல்நெஞ்சுடையவனுக அமைச்சன் இருப்பினும் பெருந்தீமையாகும் 'நடுவு நிலையினின்றும் நீங்கிய அமைச்சன் மனத்திற் கிடந்ததை வெளிப்படுத்த அதனைக் கேட்ட மன்னவன் கொடுந்தொழிலைச் செய்வதுபோல் கதிரவன் கொதிக்கிருன்' என்ற கருத்தில் பாலைக் கலிப்பாடல் ஒன்று கூறிச் செல்கிறது.

"நடுவு இகந்தொரீ நயன்
இல்லான் வினைவாங்கக்
கொடிதோர்த்த மன்னவன்கோல்
போல ஞாயிறு
கடுகுடி கதிர்மூட்டிக் காய்சினம்
தெறுதலின"

[பாலைக் கலி—8]

இப்பழம் பாடல்கள் அமைச்சனுடைய நுண்ணறிவுத் தேவையை இத்துணைப் பெரிதுபடுத்திப்பேசுவதன் நோக்கம ஒருவாறு விளங்கும். கடுகைத் துளைத்து எழுகடலைப் புகட்ட வந்த பெருமகனருங் கூட 'அமைச்சு' என்றதொரு அதிகாரம் வகுத்து அதனுள் இருக்கும் பத்துக் குறளிலும் அமைச்சனுக்கு நுட்பமான அறிவு வேண்டுமென்பதைக் குறிப்பாலுணர்த்திப்பின்னர் தனியே அதற்கென்றே ஒரு குறளும் அமைக்கின்ருர். 'மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம், யாவுள முன்னிற் பவை' (குறள் 636) என்ற குறள் ஆய்தற்குரியது. நுண்மதி என்றும், நூலறிவென்றும் இரண்டாகப் பகுத்து இங்கும் பேசப்படுவதைக் காணலாம். நூலறிவில்லாவிடத்தும் நுண்ணறிவு இருத்தலையும் பலரிடை நுண்ணறிவில்லாவிடத்தும் நூலறிவு இருத்தலையும் காணலாம். எனினும் இவை இரண்டும் சேர்ந்தமைந்தாலேயே முழுப்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

---

தெல்லிப்பழை கிழக்கு

## சைவப்பிரகாச வித்தியாசாலை தாபகர் தினம்

டி கொண்டாட்டம் வித்தியாசாலை மண்டபத்தில் 23-5-55 திங்கட்கிழமை மாலை தாபகர் பிரம்மஸ்ரீ. க. சுந்தரமூர்த்தி ஐயர் அவர்களை நினைவுகூரும் முகமாக வட பெரும்பாக வித்தியாதரிசி ஸ்ரீமான். சே. தியாகராசா அவர்கள் தலைமையில் ஆரம்பமாயது. முதலில் மாணவர் வந்தனுபசாரப் பாடல் பாடினர். பின்பு தலைமையாசிரியர் திரு. செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் தமது அறிக்கையில் பாடசாலையில் நடைபெறும் வேலைகளைத் தெரிவித்ததுடன், பகிரங்க பரீட்சைகளில் கூடியவீத மாணவர் சித்தியடைதற்கும் வலிவடக்கில் சிறந்த பாடசாலைகளுள் ஒன்ருக விளங்குதற்கும் ஆசிரியர்களுடைய ஊக்கமும ஒற்றுமையும் பிரதான காரணங்களென்பதையும் குறிப்பிட்டார். பின்னர் தலைவர் அவர்களும் முகாமையாளர் திரு. தெ. து. ஜெயரத்தினம் அவர்களும் பேசும்போது இப்பாடசாலையின் சேவைகளை வியந்ததுடன், தாபகருடைய மேலான நோக்கம் நிறைவேறுதற்கு ஆசிரியர்களுடன் பெற்ருர் ஒத்துழைக்கவேண்டுமெனவும் கூறினர்.

பின்னர் திருமதி தியாகராசா சிவநாயகி யம்மையார் அவர்கள் மாணவர்க்குப் பரிசில் வழங்கினர். அதன்பின் மாணவர்கள் நடனம், நாடகம், பேச்சு, பாட்டு என்பவற்ருல் சபையோரை மகிழ்வித்தனர். ஈற்றில் தலைமையாசிரியர் நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

---

# சுகாதாரச் சொற்பொழிவுகள்

யாழ்ப்பாண நகரசபைச் சுகாதாரப் பகுதியாருடைய ஒத்துழைப்புடன் யாழ்ப்பாணம் சுகாதாரசங்கத்தார் வைத்திய வல்லுநர்களால் சுகாதாரச் சொற்பொழிவுகள் செய்யப்படுதற்கு ஒழுங்குகள் செய்திருக்கின்றனர்.

"தேக சுகத்தில் கண் பெறும் இடம்' என்னும் பொருளில் அர்ச் யோவான் கல்லூரி மண்டபத்தில் வெள்ளிக்கிழமை 29—5—55 மாலை வைத்திய கலாநிதி பி. சிவசுப்பிரமணியம் அவர்கள் ஓர் சொற்பொழிவாற்றினர். இதுபோன்றவேறு சொற்பொழிவுகள் பின்பு நிகழும்.

இது சுகாதார வாரத்தின் ஒரு பகுதியாகும். குழந்தைகள் காட்சி முதலியன வண்ணார்பண்ணை, கந்தர்மடம், பள்ளிவாசல், சுண்டிக்குளி, கரையூர் வட்டாரங்களில் நடைபெறும். மிகச் சிறந்த உணவுப்பொருள் நிலையம், உணவு நிலையம் என்பவற்றுக்குக் கேடயங்கள் கொடுபடும். பாடசாலைச் சுகாதாரக் காட்சி முதலியவையும் நடைபெறும்.

## சூரிய கிரகணத்துக்கு அரண்டரை மணி நேரம்

ஆனி மாசம் 20 ந் திகதி வருகின்ற சூரிய கிரகணத்தைப் பார்ப்பதற்கு இரண்டரைமணி நேர ஓய்வு அரசாங்கம் கொடுக்கவேண்டுமென்னும் கருத்தை தொழில் மந்திரி கலாநிதி கலீல் அவர்கள் அரசாங்கத்துக்குச் சமர்ப்பிப்பாராம்.

## பி. ஏ, விசேட தராதரப் பரீட்சை தமிழுக்கும் வேண்டும்

இலண்டன் சர்வகலாசாலையாருடன் எல்லா ஒழுங்குகளையும சிங்கள மொழிப் பரீட்சைகளுக்குச் செய்திருக்கும் எங்கள் அரசாங்கம் தமிழில் பீ. ஏ. விசேட தராதரப்பரீட்சைக்கு (Honours) மாத்திரம் ஒழுங்கு செய்யாமல் விட்டிருக்கின்றது. இதுபற்றிக் கல்வித் துறையிலுள்ள அறிஞர்கள் பல முறை எடுத்துக் காட்டியும் அரசாங்கம் அசையாமலிருக்கின்றது.

ஆசிரியர் திரு. ஏ. எஸ் கனகரத்தினம அவர்கள் தலைமையில் நடந்த வடமாகாண ஆசிரிய சங்க நிருவாகசபைக் கூட்டத்தில் இது ஆராயப்பட்டு பீ. ஏ. தமிழ் விசேட தராதரப் பரீட்சை (Honours) நடத்துவதற்கு இலண்டன் சர்வகலாசாலையாருடன் ஒழுங்கு செய்ய வேண்டுமென்று வித்தியா பகுதியாரை நிருவாக சபையார் கேட்டிருக்கின்றனர்.

## தேயிலை அரை விலைக்குத் தருவார்களாம்

இரண்டு வார காலத்தில் ஏறக்குறைய அரை விலைக்குத் தேயிலை தருவார்களாம். முதலாந்தரத் தேயிலை இருத்தல் ரூபா 1-75 இரண்டாந்தரம் இருத்தல் ரூபா 1-50 ஆக விற்கப்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகுக்கு உயிராகியவன் அரசன்

3-ம் பக்கத் தொடர்ச்சி

பயனை விளைப்பதில்லை. எத்துணைச் சிறந்த நுண்ணறிவாயினும் நூலறிவில் வழி வழிதுறையற்றுச் சென்றுவிடும். நுண்ணறிவில்வழி நூலறிவு செக்கிழுக்கும் மாடுபோல்சென்ற வழியே செல்லுமே தவிரப் புதியன காணமுற்படாது.

ஒரு காலத்து ஓரிடத்து அனைவரும் நம்பின ஒன்றை நூல் வழக்குச் சிறந்ததெனப் பேசும். ஆனல் காலமும், இடனும் மாறியவிடத்து இந்நிலை முறை மாறிவிடும். ஆனல் முன்னர் எழுதப்பெற்ற நூலில் இப்புதுவழக்கு இடம்பெற வாய்ப்பில்லை. எனவே நுண்ணறிவுடன் உலகியலறிவும் இல்லாதான் இம்மாற்றங் கண்டு மருட்சியடைய நேரிடும். காலமாறுபாட்டான் ஏற்படும் வழக்கு மாறுபாட்டை ஏற்றுக்கொள்ள மறுக்கும் நூலறிவு வளர்ச்சியை மறுக்கும் அறிவாகும். எனவே வள்ளுவர் இவ்வளர்ச்சியைக் காணுமிடத்து உடன் அறிந்துகொள்ளும் நுண்ணுணர்வை முதலிற் கூறினர். அவ்வாருயின் மதிநுட்பம் மட்டும் போதாதா நூலறிவு எற்றுக்கு என்ற வினுத் தோன்றுமன்ரே! வளர்ச்சி என்பது தனித்துத் தோன்றுவதொன்றன்று. பழமையிலிருந்துதானே புதுமை தோன்றல் கூடும். விதையிலிருந்துதானே மரம் தோன்றல் கூடும். மரத்தில் விதையின் தன்மை காணப்படுமாறுபோலப் புதுமையிலும் பழமையின் இயல்பு காணப்படும். பழமையை அறவே ஒழித்த புதுமை வேண்டுமெனில் விதையில்லாத மரம் போலவாகும். எனவே பழமையை நன்கு அறிய ஏதுவாகும் நூலறிவை அடுத்துக் கூறினர் ஆசிரியர்.

ஆழங் காணமுடியாத மனித மனத்தை ஆட்சி செய்யும் அமைச்சருக்கு நுண்ணறிவும் உலகியலறிவும் நூலறிவும் தேவை என்று கூறவும் வேண்டுமோ? இக்கருத்தை நன்கு வலியுறுத்தவும், இவற்றுள் ஒன்றைப் பெரிதெனமதித்துப் பிறிதொன்றை ஒதுக்கி விடாதிருக்கவுமே ஆசிரியர் "செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து, இயற்கை அறிந்து செயல்" (637) என்று கூறுகின்ருர். செயற்கை அறிய உதவுவது நூலறிவும், உலகத்தியற்கை அறிய உதவுவது நுண்ணறிவுமாம்.

இத்தகைய சிறந்த அறிவிரண்டையும் உடையவர்களையே பழந்தமிழ்மன்னர்கள் அமைச்சாராகப் பெற்றிருந்தனர். ஆனல் மனிதன் அறிவின் உதவிகொண்டு மட்டும் வாழ்ந்துவிட முடியாதன்ரே? அறிவு, உணர்வு என்ற இரண்டில் மக்களை ஆளவந்த அரசனும் அமைச்சனும் வெறும் அறிவு ஒன்றையே நம்பி ஆட்சி செய்தல் இயலாத காரியம், அவ்வறிவு எத்துணைச் சிறந்ததாயினும் கூரியதாயினும் இருவகையிலும சிறந்ததாயினும் மனிதப் பண்பாட்டின் அடிப்படையாகிய உணர்வுடன் கலந்திருந்தாலன்றிப் பயன்படாதது மட்டுமன்று. தீமையை விளைக்கும். எனவே அமைச்சரைத் தேர்ந்தெடுக்கும் கட்டுப்பாடுடைய அரசன அவர்களுடைய அறிவின் திறம் ஒன்றை மட்டும் கண்டு அமைந்துவிடாமல் பண்பாட்டையுங் காணமுற்பட்டான். பண்பாட்டுடன் கலவாத அறிவு மயிர் வினைத் தொழில் அறியாதவன் கையிற்பட்ட கூரிய கத்தியை ஒக்கும். அக்கத்தியை அவன் பயன் படுத்தத் தொடங்கினுல் தனக்கும் பிறருக்கும் உறுதியாகத் தீங்கிழைத்து விடுவான். எனவே பண்பும் அறிவும் உடையவனையே நாடித்தேர்ந்து அமைச்சராக்க முயன்றனர் பழந்தமிழ் மன்னர்கள்.

அமைச்சனுக வரப்போகிறவனுடைய அறிவுத்திறத்தைச் சோதித்துப் பார்ப்பதைக் காட்டினும் பண்பாட்டைச் சோதிப்பதே மிகவும் இன்றியமையாதது. அறிவாற்றல் சிறந்தவன் கட்டியங்காரன். நுண்மாண் நுழைபுலமும், நூலறிவும் உடையவனெனினும் பண்பாடின்மையிற் சச்சந்தனுக்கு இயமனுக மாறிவிட்டான். அவன் நூலறிவு, சச்சந்தனிடம் காணப்பட்ட குறைகளை எடுத்துக்காட்ட அவனுடைய நுண்ணறிவு மன்னனை மாய்க்க வழிதேடிற்று. பண்பாடு இருந்திருக்குமாயின் மனிதன்செய்யும்தவறையேசச்சந்தன் செய்தான்என்று அமைதியடைந்து அதனை நீக்க வழிதேடி இருப்பான். எனவே மேலே கூறிய இருவகை அறிவுடன் பிறிதொன்றையும அமைச்சரிடத்து வேண்டினர் பழந்தமிழ் மன்னர் என்பதையே நம் இலக்கிய வாயிலாகவே அறிதல் கூடும்.

—தமிழ்நாடு

## சனசமூகநிலையங்கள்பற்றி அரசாங்க அதிபா

அளவெட்டி நுங்கயப் புலம் வாசிகசாலைத் திறப்பு விழாவில் வடமாகாண அரசாங்க அதிபர் ஸ்ரீ எம். ஸ்ரீகாந்தா அவர்கள் பேசும்போது பல சனசமூக நிலையங்களும் அவை போன்ற பிற நிலையங்களும் தனிப்பட்டோரின் நலன் கருதி நடப்பதைக் கண்டு தாம வருந்துதாகக் கூறினர். சில நிலையங்கள் வீண் பேச்சு நடக்கும் இடங்களாகின்றன என்று அவர் மேலும் குறிப்பிட்டதோடு பொது நன்மைக் குழையாத நிலையங்கள் அரசாங்க உதவியைப் பெறமாட்டா என்று எச்சரிக்கையுஞ் செய்தார்.

# குழந்தை முருகனது குறும்பு

ஸ்ரீ வ. குகசர்மா

தேவர்கள் துன்பம் தீரும் காலம் வந்துவிட்டது. சிவபெருமான் நெற்றிக் கண்ணில் சோதியாய் அவதரித்த முருகப்பெருமான் இமயமலை மீதுள்ள சரவண தடாகத்தின் கண்ணே ஒரு சிறு குழவிபோல வீற்றிருக்கின்ருர்.

சரவணப் பொய்கையின் பக்கலில் நிற்கும் மரங்கள் தூண்களாகவும் பல கொம்பர்கள் மேல் விதானமாகவும், அதிலே தூங்குகின்ற பல காய்களும் பழங்களும் பூங்கொத்துக்களும் அப்பந்தரை அலங்கரிக்கவும், முருகப்பெருமான் ஒருசிறு குழந்தை வடிவம் கொண்டு சரவணப்பொய்கையிலுள்ள ஒரு தடாகத்தின் கண்ணே வீற்றிருக்கிருர். ஒளி பொருந்திய சிலசங்குகளைத் தாங்கிக்கொண்டு தேன் பொருந்தியனவாகச் சில தாமரை மலர்கள் முருகப்பெருமானைச் சூழ்ந்து நிற்கின்றன.

இவ்வாருன சிறப்புடன் முருகப்பெருமான் குழந்தை உருக்கொண்டு வீற்றிருத்தலைத் தேவர்கள் கண்டார்கள். ஆறு கார்த்திகைப் பெண்களையும் அழைத்தார்கள். முருகப்பெருமானைப் போற்றி வளர்க்கும்படி கூறினர்கள். குழந்தை என்ருல் யாருக்குமோர் பற்று. இதுவோ தெய்வக்குழந்தை. கார்த்திகைப் பெண்கள் மகிழ்ந்தார்கள். வாரியணைத்தார்கள். பாலூட்டினர்கள். தாமரைப் பூவாகிய தொட்டில் இட்டுத் தாலாட்டினர்கள். குழந்தை என்ருல் குறும்பு வேண்டும். அது பெற்ற தாய் தந்தையர்க்கு பெருமகிழ்ச்சி தரும். குழந்தையின் சிறுகை அளைந்த கூழ் அமிழ்தினும் இனிதாம் தாய்தந்தையர்க் கிருக்கும். அவ்வாறே முருகப்பெருமானும் கார்த்திகைப் பெண்களை மகிழ்விக்க நினைத்தார்.

"ஆடவோ ருருவஞ் செங்கை
யறையவோ ருருவ நின்று
பாடவோ ருருவ நாடிப்
பார்க்கவோ ருருவ மாங்க
ஞேடவோ ருருவ மோர்பா
லொளிக்கவோ ருருவம்
[யாண்டும்
தேடவோ ருருவ மாகச்
சிவமகன் புரிதலுற்ருன்"

இதுமாத்திரமா? ஒரு உருவம் தவழ்ந்து செல்லும், ஒரு உருவம் விழும் இரங்கும், ஒரு உருவம் ஒளிக்கும் இவ்வாறு பல குறும்புகளைச் செய்யக் கார்த்திகைப் பெண்கள் பார்த்தார்கள். கோபம் வரவில்லை. அவர்களுக்கும் கூட விளையாடத் தான் மனம்வந்தது. சிறிய கம்பை எடுத்தார்கள். பெரிய கம்பாய் எடுக்க அன்பு விடவில்லை. குறும்பு செய்யும் பிள்ளையை உறுக்கினர்கள். குழந்தை சிரித்தது. அதன் பற்களின் ஒளி நிலவொளி போன்றிருந்தது. அவர்கள் குழந்தை என நினைத்து உறுக்குகிருர்கள். ஆனல் குழந்தையோ உலகம் எல்லாவற்றையும் பாதுகாக்கும்வல்லமையுடையது அதை நினைத்துச் சிரித்திருக்கலாம். அவர்களின் அன்பை நினைத்துச் சிரித்திருக்கலாம்.

—0—

# சிதம்பர நடேசர் கும்பாபிடேகம்

# பிரயாண ஒழுங்குகள்

அறுபத்துமூன்று ஆண்டுகளுக்குப் பின் சிதம்பர நடேசர் திருக்கோயில் புதுப்பிக்கப் பெற்று ஆடி ஏழாந் திகதி மகா கும்பாபிடேகம் நடைபெறவிருக்கின்றது.

2 இலங்கையிலிருந்து இத்தொடர்பில் யாத்திரை செய்ய விரும்புவோர் பின்வரும் பிரயாண ஒழுங்குகளை உடனே செய்தல் வேண்டும்:—

(அ) இதுவரையில் எடுத்திராவிட்டால் அவசிய கால பிரயாண அனுமதிப் பத்திரம் ஒன்று எடுக்க ஒழுங்கு செய்யவேண்டும்.

(ஆ) அந்தப் பிரயாண அனுமதிப் பத்திரத்தைக கொழும்பு இந்திய அரசாங்கத் தூதுவருக்கு அவருடைய அனுமதிப் பத்திரம (விசா) தரும்படி அனுப்ப வேண்டும். அத்துடன் ரூபா 2-50 க்கு தபாற் காசுச் சீட்டு (போஸ்ரல் ஓடர்)ம அனுப்பவேண்டும்.

(இ) வசிக்குமிடத்திலிருக்கும் அரசாங்க சுகாதார வைத்தியரிடம்போய்ப் பால் குத்தவித்து ரூபா மூன்று கொடுத்து அததாட்சிப் பத்திரமொன்று பெறவேண்டும்.

(ஈ) ஒருவர் ஐம்பது ரூபா ... [illegible] லாம். கூடக் கொண்டு போகவேண்டுமானல் அதற்கு வேண்டிய அனுமதிச் சீட்டுப் பெறுதற்கு விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்.

(உ) ஆகாயப் பிரயாணஞ் செய்ய விரும்புவோர் ஆகாயவிமான நிலயத்தாருடன் முன்னரே இடவசதி ஒழுங்குபண்ண வேண்டும்.

3 சிதம்பரம் மாலைகட்டித் தெருவிலுள்ள சைவ பரிபாலன சபை மடததில் இரு குடும்பங்களுக்கு அல்லது எட்டுப் பேருக்கு மாத்திரம் இடமுண்டு. பெருந்தொகை அடியார் வரக்கூடுமாகையால் இடவசதிகளை முன்னரே ஒழுங்குபண்ண வேண்டும்.

4 சிதம்பரம்காவலர்பாடசாலை அதிபர் திரு எஸ், பொன்னுச்சாமி அவர்களுடன் யாழ்ப்பாண யாத்திரிகர்கள் பாடசாலையில் தங்குதற்கு ஒழுங்கு சபையார் மூலம் செய்யப்படலாம்.

5 இந்துசாதனக் காரியாலய அதிபரிடம் பிரயாண அனுமதி, காசு அனுமதி முதலிய சீட்டுகள் பெறுதற்கு விண்ணப்பப் பத்திரங்கள் பெறலாம்.

வேண்டிய வேறு விபரங்கள் சபையாரிடம் அறியலாம்.

ஆ. தனபாலசிங்கம்

கௌரவ காரியதரிசி
சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம்

## கொழும்பு வைத்தியசாலை அதிபர்

கொழும்பு அரசாங்க வைத்தியசாலை அதிபர் பதவிக்கு வைத்திய கலாநிதி கே. கனகரத்தினம் அவர்கள் நியமிக்கப்பெற்றிருக்கின்ருர்களாம்.

## புதிய சமாதான நீதிபதி

யாழ்ப்பாணம முடிக்குரிய வழக்கறிஞர் திரு. சி. சி. சோமசேகரம் அவர்கள் சமாதான நீதிபதியாக நியமிக்கப்பெற்றிருக்கின்ருர்.

## வெளிச்சவீட்டடியில் விக்கினேசுவரர் திருவுருவம்

காங்கேசன் துறை வெளிச்சவீட்டுக்கு அணிமையிலுள்ள கடற்பகுதியில் பித்தளையாற் செய்யப்பெற்ற விக்கினேசுவரர் திருவுருவமொன்று கண்டு எடுககப்பட்டிருக்கின்றதாம். அது ஒரு அடி உயரம் 60 இருத்தல் நிறையுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனூர்

நாள் : மன்மத ஞு வைகாசி மீ உச உ (7—6—55) செவ்வாய்க்கிழமை.

இடம் : நாவலர் சைவாச்சிரம மண்டபம்.

நிகழ்ச்சிகள் :

முற்பகல் 9 மணி — 1 மணி கடவுளாராதனை, திருஞான சம்பந்தமூர்த்தி நாயனூர் சரித்திரம் படித்தல், மாகேசுர பூசை,

இரவு 7 மணி திருஞான சம்பந்த மூர்த்திநாயனுர்' என்னும் பொருள்பற்றிச்சிறந்த அறிஞர் பிரசங்கம்.

## குமரகுருபர சுவாமிகள்

நாள் : வைகாசி மீ உடு உ புதன்கிழமை.

இடம் : நாவலர் சைவாச்சிரம மண்டபம்

இரவு : 7 மணி கடவுளாராதனை. தமிழ்மறையோதல் "குமரகுருபர சுவாமிகள்" என்னும் பொருள்பற்றிச் சிறந்த அறிஞர் பிரசங்கம்.

சைவாபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக.

மு, மயில்வாகனம்
சமயப்பிரசாரஅமைச்சர்
சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம், 30-5-55.
M 47 3-6 (து 150)

## அப்—பாக் கொடிப் பிணக்கு

அப்கானிஸ்தனுக்கும் பாக்கிஸ்தானுக்குமிடையிலுண்டான கொடிப் பிணக்குத் தீர்ந்துவிட்டதாம்.

# எச்சரிக்கை!

## சூரிய கிரகணம் கண் பார்வையைக் கெடுக்கும்

ஆனி 20 உ வரவிருக்குப் சூரிய கிரகணத்தைப் பார்ப்பதால் கண்பார்வை கெடுகின்ற அபாயமுண்டென்ற அரசாங்கசுகாதாரப் பகுதியார் எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர். புகைக்கண்ணுடிகளூடாயும் விரல்களூடாகவும் கிரகணம் பார்க்கும முறை பிழையானதென்றும் குறிப்பிட்டிருக்கின்றனர்.

கிரகணத்தைப் பாராமல் விடுதலே புத்தியாகுமாம். பார்க்கவேண்டுமென்று விரும்புவோர் தடித்த காகிதத்தில் ஊசித் துவாரம உண்டாக்கி அதன்மூலம் கரிய காகிதம் ஒன்றில் சூரிய வடிவம் விழச் செய்து பார்ப்பது ஒன்றே பிழையில்லா முறையாகும் என்று குறிப்பிட்டிருக்கின்றனர்.

## முரசுமோட்டையில் தமிழ்ப் பாடசாலை

முரசுமோட்டை குடியேற்றப்பகுதியில் தமிழ்ப் பாடசாலை ஒன்றை கல்வி மந்திரி ஸ்ரீ பண்டா திறந்து வைத்தார். அச்சருணம் ஸ்ரீ வி குமாரசாமி பேசும் போது உழவுத் தொழிலின் மேன்மையை விளக்கி அங்குள்ளோருக்கு உற்சாகமூட்டினர்.

## தமிழர் முன்னுள்ள அரசியல் நெறிகள்

நல்லூர் வாலிபர் முன்னணி வரவேற்புக்கூட்டத்தில் தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. கு. வன்னியசிங்கம் பேசும்போது தமிழருக்கு இன்று மூன்று வழிகள் உள்ளன என்றும் அவைகளுள் முதலாவது ஒரே அரசாங்கத்தின்கீழ் இப்பொழுதிருப்பது போலிருந்து தமிழ்மொழி தமிழ்க்கலாசாரம் ஆதியவற்றை இழந்து காலகதியில் பெரும்பான்மைச் சிங்கள சமூகத்தில் மறைதல், இரண்டாவது சம உரிமையுள்ள தமிழ் இராச்சியத்தில் வாழ்தல், மூன்றுவது இந்தியாவுடன் இணைந்தோ இணையாமலோ தமிழ்ப்பகுதிகளைப் பிரித்துவிடுதல் என்றும், இரண்டாவதாகிய "தமிழ்—அரசே" தங்களுடையதெனறும் கூறினர்.

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

### இருவாரப் பலன்கள், 5—6—55 —— 11—6—55

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

இது ஒரு தொந்தரவான வாரமாயிருக்கக்கூடும். முதல் இரு நாட்களும் உம்முடைய பொறுமையை அதிகம் தாக்கும். உம்முடையநண்பர் சிலரோடு நீர் கோபிக்கக்கூடும் சொந்தக் காரியமளவில் குற்றமில்லாத ஒரு வாரம். ஆனுல் நீர் முயன்று வேலை செய்யவேண்டும்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

ஞாயிறும் திங்களும் புது முயற்சிகளுக்குச் சிறிது குற்றமில்லாமலிருக்கும். செவ்வாயும் புதனும் உம்முடைய எல்லாக் கருமங்களிலும் நீர் மிகக் கவனமாயிருக்க வேண்டும. வாரமிகுதி ஒரு அளவுக்குக் குற்றமில்லாமலிருக்கும் ஆனுல் உமக்கு மனச்சமாதானமிராது.

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

முன் அரைவாரம் குழப்பமுள்ளதாயிருந்த போதிலும் உம்முடைய முயற்சிகளில் நல்ல பலனைத் தரும். செலவதிகரிக்கும். ஆனுல் அவற்றைச் சமாளிப்பதற்குப் போதிய வருவாய் வரும். வியாழன் வெள்ளி சனி உம்மை அதிகம் நிலைகுலைக்கும்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

இந்தவாரம் உம்முடைய முயற்சிகளில் உம்முடைய நண்பர் அதிக உதவியாயிருப்பர் உம்முடைய கருமங்களை நீர் மிக இலகுவாக ஒழுங்கு பண்ணக் கூடியதாயிருக்கும். செலவதிகரிக்கும் வார இறுதியில் இனத்தவர்களுடன் வாக்கு வாதத்தைத் தவிர்க்கவும்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

இந்த வாரம் காணிகள் காணிப் பொருள்கள் மூலம் நீர் சிறிது இலாபம் பெறக் கூடியதாயிருக்கும். அத்துடன் சகோதரர்களும சகோதரிகளும் உதவியாயிருப்பர். வார இறுதியில் சுகவீனத்துக்கிடமுண்டு

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

உத்தியோகத் துறையில் நல்ல வாரம். ஆனுல் குடும்பப் பகுதியில எல்லாம் நல்லாயில்லை. உம்முடைய 'தாவழி இனத்தவர் உமக்குச் சில மனச்சலனங்களை அல்லது மனத் துன்பங்களை உண்டாக்கக் கூடும். வாரஇறுதியில் தனலாபம நிச்சயம்.

**துலாம்சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம்1,2,3ம் பாதம்**

இந்தவாரம் கந்தோரில் தொந்தரவுகள் உம்மை அதிகம் நிலைகுலைக்கும். தேகசுகம் நல்லாயிராது. ஒன்றையும் புதிதாய்த் தொடங்க வேண்டாம். வார இறுதியில் நடைமுறை ஒழுங்குகளில் சில மாற்றங்களுண்டாகக் கூடும்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

இந்தாரம் குடும்பச் சூழலில் பிழை எண்ணங்கள் உண்டான படியே யிருக்கும். தேகசுகமும் பழுதாகக்கூடும் சிறு [illegible] மிடமுண்டு. வார [illegible] த்தையடக்குக.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாகம்.**

உம்முடைய தேகசுகம் சிறிது காலத்துக்குப் பழுதாகக் கூடும் அளவுக்கு மிஞ்சி வேலை செய்தலைத் தவிர்த்து முழு ஆறுதல் எடுக்கவும். குடும்ப சமாதானம் சிறிது மிருக்க மாட்டாது. வாரஇறுதியில் இழிமொழிகள் இல்லாமற் செய்யவும்.

**மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாகம்.**

நல்லவாரம். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக, காணிகள்மூலம் இலாபங்களுக்கு மிடமுண்டு. உம்மோடு போட்டியிடுவோரை நீர் வெல்லக்கூடியதாயிருக்கும் வார இறுதியில் சமூகசித்தி நிச்சயம்.

**கும்பராசி அவிட்டம் 3, 4 பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

இத்தவாரம் காணிகள் மூலம் நீர் சிறிது இலாபம் பெறக் கூடியதாயிருக்கும். நண்பர் அதிக உதவியாயிருப்பர் உத்தியோகத் துறையில் நல்லவாரம். சிறு அபாயங்களுக்கு அறிகுறிகளிருக்கின்றன. ஆகையால் கவனமாயிருக்கவும்,

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

சமூக காரியங்களோடு உத்தியோக காரியஙகளுக்கும் நல்ல [illegible] தரும் [illegible] துக்கும் இடமுண்டு.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைநகர் கிழக்கு களபூமி
சின்னக்குட்டி கந்தையா
—வழக்காளி,

இல. 10666 எதிராக
1. வண்ணுர்பண்ணை கிழக்கு முருகேசு கந்தவனமும்
2. ஷை V. மு. கந்தவனம் மகள் இலக்கிய சுந்தரியும்
3 உரும்பராய் சின்னையா பொன்னையாவும் —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 10666 – ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைந்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப் படும் ஒரு துண்டுக்காணி 1955ஞு ஆடி மீ 16உ சனிக்கிழமை பிறபகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

1. வடமாகாணம்யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணுர்பண்ணைக் கோவிற்பற்று வண்ணுர்பண்ணை கிழக்கிறை "தட்டான் தறை" கி பரப்பு 9-ம் $14\frac{1}{2}$ குளியும் அளவின்படி 9 பரப்பும் $5\frac{1}{2}$ குளியும் (ஐந்தரை) இதில் உலாந்தா பேஸ்தர் யோ. மனுவல் என்பவரால் 29-651 ல் 580-ம் இலக்கத்தில் அளந்துகண்ட படத்தின்படி வடமேற்குப் பக்கமாக 2-ம் துண்டு என்று அட்சரமிட்ட காணி விசாலம் 1 பரப்பும் 3 குளியும் அதைசசேர்ந்த பயிர் வகைகளும் அப்பரப்பு 1—ம் குளி 3 க்கும எல்லை கிழக்கும் தெற்கும் நாகலிங்கம் பெண் கண்மணியினுதனம், அதாவது 1-ம் துண்டு என்று அட்சரமிட்ட வாதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு ஆறுமுகம் வைத்திலிங்கத்துக்கும் ஒழுங்கையும், இக்காணி D 211/212-ம் புத்தகத்தில் பதியப்பட்டது,

நான்கு துண்டுக் காணிகள் 1955ஞு ஆடி மீ 19உ செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணிகள் விபரம்

2. யாழ்ப்பாணப் பகுதி வேலணைக் கோயிற்பற்று வேலணை மேற்கு இறைதின்னைக் கலட்டி நி பரப்பு $4\frac{1}{8}$ ம் பனைகளும் வடலிகளும, எல்லை கிழக்கும வடக்கும சார்த்திகேசு பெண் சின்னுச்சிக்குடைய வாதனம், மேற்கு ஆறுமுகம் கைம்பெண் செங்கமலத்துடைய வாதனம், தெற்கு சுப்பிரமணியம் பெண் தையலம்மாவினுதனம் இக் காணியடங்கலுய இக்காணிC. 93/174 - ம் இலககப் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது

3. ஷையூர் திண்ணைக்கலட்டி $4\frac{3}{4}$ பரப்பு (நிலப்பரப்பு பனைகளுய இலுப்பை மரமும், எல்லை கிழக்கு வயித்தியனுதர் கந்தையாவுக்குடைய வாதனம், வடக்கு நாகமணி சபாபதியுடையவாதனமும் பங்காளரும், மேற்கும தெற்கும் ஒழுங்கை இக காணி C. 93/174-ம் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது.

4. ஷையிறை திண்ணைக்கலட்டி நிலப்பரப்பு $1\frac{3}{4}$ - ம் பனைகளும், எல்லை கிழக்கு நாகலிங்கம் பெண சின்னுச்சிககு முடைய வாதனம், வடக்கு கணபதிபெண் பாறுபதிக்கு முடையவாதனம், மேற்குஒழுங்கை தெற்கு சார்த்திகேசன் பெண் பறுபதத்துக்குடைய வாதனம், இக்காணி C. 93/176-ம் புத்தகத்தில் பதியப்பட்டது.

5. ஷையிறை திண்ணைக்கலட்டி நி பரப்பு 6—ம் குளி 3—ம் பனைகளும் வடலிகளும், எல்லை கிழக்கு கந்தவனம் பெண் சின்னுச்சிப்பிள்ளைக்கும், நாகராசா பெண் சொர்ணம்மாவுக்குமுடைய வாதனங்கள், வடக்கு ஷையொழுங்கை, மேற்கு முருகேசு தம்பிப்பிள்ளைக்கும் பஙகாளருககுமுடைய வாதனங்களும் கனசசபை வயித்திலிஙகத்துக்கும் சுப்பிரமணியம் பெண் இளையபிள்ளைக்குமுடைய வாதனங்கள். இதடங்கலும் இக்காணி C. 272/277ம் புத்தகத்தில் பதியப்பட்டது.

இக் காணிகளைப்பற்றி வேறு விஷயம் அறிய விரும்பினுல் கனம் தங்கிய பிறக்டர் வண்ணுர்பண்ணை கிழக்கு உவாட்&டேவி வை, சிவசுப்பிரமணியமிடம் அறிந்துகொள்ளலாம்.

S. Ratnasabapathy
கொம்மிஷனர்,
&
வெந்தீஸ் மேஸ்தர்.
51, 4th Cross Street,
Jaffna, 1-6-55
M 50 30-6 (து 2,0)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

நாரந்தனை சுப்பிரமணியம் சண்முகம்
—வழக்காளி

இல 11630
எதிராக
1 சரவணை விசுவனுதர் மயில்வாகனமும் பெண்
2 ஷை பாறுபதிப்பிள்ளையும்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11630-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகளை 1955 ஞு ஆடி மீ 1-ந் உ வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோயிற்பற்று சரவணை இறை கட்டுவன் குளவயலும் கட்டுவன் குளவயல் கிழக்கும் நெற்பரப்பு பத்து (10) எல்லை கிழக்கு செல்லப்பா பெண் செல்லமுத்து, வடக்கு வாய்க்கால் மேற்கு இராசரத்தினம் பெண் மனோன்மணி தெற்கு மயில்வாகனம் பெண் இராசம்மா இதடங்கலும்.

2 ஷை இறை கனகமூலை கிழக்கு நெற்பரப்பு முப்பது (30 எல்லை கிழக்கு முருகர் சரவணைபினுருமைக்காரர் வடக்கு இராசையா பெண் அன்னலட்சுமி மேற்கு சதாசிவம் பெண் கனகம்மா தெற்கு வல்லிபுரம் பெண் பொன்னம்மாவும் இலிங்கப்பிள்ளை நாகலிங்கமும் செல்லையா பெண் விசாலாட்சியும். இதடங்கலும்


ஆ. ச. கந்தையா
கொம்மிஷனர்
காரைநகர்
27—5—55.
M 52 3-6 (து 50)

## அடைவுநகை ஏலவிற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் காங்கேசன் துறையிலிருக்கும் C. செல்வத்துரை அவர்கள் கடையில் .—1—1942 முதல் 31-12-53 வரைக்கும் அடைவுவைத்து மீட்கப்படாத தவணை தப்பிய நகைகளை 1955-ம் ஆண்டு ஆனி மாதம் 28ந் தேதி செவ்வாய்க்கிழமை மேற்படியார் கடையில் முற்பகல் 9 மணி தொடக்கம் என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

செ. இரத்தினசபாபதி
வெந்தீஸ் மேஸ்தர்
1—6—55
M 51 3-6, 10 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வீரத்தை மதிக்கும் வீரத்தின் அழகு

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

வைகளை இழந்து வெறுங் கையனுகிய இராவண குமரன் மீண்டும் அவை பெற்றுக்கொண்டு மூண்ட பெருஞ் சினம் தூண்டிட முன்வந்தான். இம்முறை மரங்களால் தாக்கியும் தேரோடு தூக்கி எறிந்தும் அவனைத் தாக்கினன் இராம தூதன். கடைசியில் பிரம்மாஸ்திரமாகிய நாகபாசத்தை எய்து அனுமனைச் சிறைப்படும்படி செய்தான் இந்திரசித்து. சிங்கம் போன்ற வீரன் பிரம்மாஸ்திரத்தின் பெருமைக்கு வணங்கி ஒன்றும் செய்யாமல் சிறைப்பட்டு விட்டான்.

"ஆய்ந்து மற்றிதன் ஆணையை
அவமதித் தகற்சி
ஏய்ந்த தன்றென எண்ணினன்
கண்முகிழ்த் திருந்தான்
ஓய்ந்ததாம் இவன்வலி என
அரக்கன் வந்துற்றுன்" (59)

அகற்சி — நீங்குதல
ஏய்ந்ததன்று — பொருந்துவதில்லை
முகிழ்த்து — மூடிக்கொண்டு

என்று மகாவீரனுகிய அனுமன் நான்முகன் பெருமையை அவமதிக்க அஞ்சிக் கட்டுப்பட்ட தன்மையைத் தெய்விக அழகோடு கம்பன் சொல்லுகிறுன். அனுமனின் இந்தப் பணியிலும் அழகு இருக்கின்றது.

[வளரும்]

* * *

## ஆசிரியர்கள் யாவரும் ஒருவகுப்பினராக்கும் ஒழுங்கு

ஆங்கில ஆசிரியர்கள் சுயமொழி ஆசிரியர்கள் ஆகிய இருசாராரும் ஒரே வகுப்பினராயிருக்கும் ஒழுங்கு ஒன்றை கல்வி மந்திரி மந்திரிசபையாருக்குச் சமர்ப்பித்திருக்கின்றுராம். இவ்வொழுங்கின்படி இனி எடுக்கப்படும் சுயமொழி ஆசிரியர்களே ஆங்கில ஆசிரியர்களுடன் சமஉரிமையுடையவர்களாயிருப்பார்கள். ஏனையோர் அவ்வாறு சமஉரிமை பெறுதற்கு மேலான சில பரீட்சைகளிற் சித்திபெறுதல் வேண்டும்.


## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் நாவடி தெற்கில் இருக்கும் பொ. கனகரத்தினம் அவர்கள் கடையில் 17-3-52 முதல 7 12 53 வரைக்கும் அடைவு வைத்து மீட்கப்படாத தவணை தப்பிய நகைகளை 1955 ம் ஹு ஆனி மாசம் 14 ம் திகதி செவ்வாய்க்கிழமை மேர்படியார் கடையில் காலை 10-30 மணிக்கு என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பொ. இராசரத்தினம்
கொம்மிஷனர்
27—5—55
M 44 27-5, 3-6

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சின்னையா கந்தையா நல்லூர்
இல. 11666
— வழக்காளி
எதிராக
1 சிவப்பிரகாசம் நடராசாவும் பெண்
2 பூரணம்
3 கிருஷ்ணபிள்ளை துரைசிங்கமும் பெண
4 ஈசுவரி அம்மா
5 அரசபிள்ளை நடராசா
எல்லாரும் நல்லூர்
— எதிராளிகள்

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 11666 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955 ஹு ஆடி மீ 9 உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடககம் அந்தக் காணிக்குள் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபா 2898-50 ம் இதற்குத் தீர்வைத் திகதி தொடக்கம 100-க்கு 5 வீத வட்டியும்

காணி விபரம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நல்லூரில் புதுவளவு என்னுங் காணி கி இ 5 வீட்டில் மேற்கு அரையும் வடக்கும் தெற்கு விருந்தைகளும், பயிர்களும் எல்லை கிழக்கு சண்முகம்பிள்ளை பெண் இராசம்மாவின் ஆதனம்
வடக்கு ரோட்டு
மேற்கு - ஒழுங்கை.
மேற்செல்லையி விருக்கும் எட்டு முழிவழி. முதலாம் இரண்டாம் எதிரிகளுக்கு உரியது பிறநீங்கலாக மற்றும் முழுவதும்.

வ. அ. துரையப்பா
கொம்மிஷனர்

யாழ்ப்பாணம்
1955ஹு வைகாசி மீ 28உ
M 45. 3-6 அ 100)


## சிதம்பரம், ஸ்ரீ நடராசப்பெருமான் திருக்கோயில் திருப்பணி மஹாகும்பாபிஷேகம்

மன்மதஹு ஆனிமீ உ௩ உ (7—7—55) வியாழக்கிழமை

பஞ்சலிங்கத் தலங்களுள் ஆகாசலிங்கத் தலமாக எங்கள் தாய்நாடாகிய பரத கண்டத்தின்கண் விளங்குவது தில்லையாகும். இது சோழநாட்டிலுள்ளது. கோயிற்புராணம், சிதம்பரபுராணம், தில்லைவன புராணம், ஏமசபாநாத புராணம், புண்டரீகபுராணம் முதலிய நூல்களில் இந்தத் தலத்தின் மான்மியங்களைப் பரக்கக் காணலாம். சிவஸ் தலங்களுள் "கோயில" என்ற சிறப்புப் பெயரையும் பெற்றது இத்தலமேயாகும். தேவர்கள் வியாக்கிரபாதர், பதஞ்சலிமுனிவர், திருமுறையாசிரியர்கள், வேந்தர், அமைச்சர் பொதுமக்கள் யாவரும் இத்தலத்தின் கண் நடராஜப்பெருமான் புரியும் ஆனந்தக்கூத்தினைத் தரிசித்து இம்மை மறுமை இன்பங்களை அடைந்தனர். தரிசிக்க முத்தியளிப்பதும் இத்தலமேயாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்கோயிலுக்கு 63 ஆண்டுகளுக்கு முன கும்பாபிஷேகம் நடைபெற்றது. 60 ஆண்டுகளுக்கு ஒருமுறை புனருத்தாரணஞ்செய்து மகாகும்பாபிஷேகம் செய்தல் சாத்திரவிதியாகும. அவ்விதியைப் பின்பற்றி இவ்வாலயத்தில் சிற்சில இடங்களில் திருப்பணி செய்ய ஆன்றோர்கள் ஒரு "கும்பாபிஷேக சபை"யை நிறுவியுள்ளார்கள். திருவருளை முன்னிட்டு ஷை சபை கும்பாபிஷேகத்தை நாளது மன்மத ஆண்டு ஆனித் திங்கள் உ௩ உ (7-7-55) வியாழக்கிழமையன்று நடத்த ஏறபாடு செய்திருக்கின்றது.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையார் இக் கும்பாபிஷேகத்துக்கு பணம் ரூபா 101/= உதவத் தீர்மானஞ் செய்து சபைத் தனதிகாரி அண்மையில் சிதம்பர யாத்திரைக்குச் சென்றிருந்தபொழுது அப் பணத்தை, கும்பாபிஷேக சபைப் பொக்கிஷாதிபதியிடம் நேரேயுதவினர். ஈழநாட்டிலிருந்து இந்தியாவுக்குப் பணம் அனுப்புதலை இக்கால அரசாங்கக் கட்டுப்பாடுகள் கஷ்டப்படுத்தியிருக்கின்றமையினால் ஷை கும்பாபிஷேகப் பொக்கிஷாதிபர் எங்கள் சபைத் தனதிகாரியை இங்குள்ள சைவாபிமானிகள் உதவும் பணத்தைச் சேர்த்துத் தமக்கு அனுப்பும்படி கேட்டுக்கொண்டனர். ஆகையினுல் ஈழநாட்டிலிருந்து ஷை கும்பாபிஷேகத்துக்குப் பணம் அனுப்ப விரும்பும் அபிமானிகள் தாங்கள் அனுப்ப விரும்பும் பணத்தினை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைத் தனதிகாரிக்கு 1-7-55 க்கு முன் அனுப்பி வைத்தால் அவர் அரசினரிடம் உத்தரவு பெற்றுச் சேரும் பணத்தை கும்பாபிஷேகச்சபைப் பொக்கிஷாதிபருக்கு அனுப்பி வைப்பார்

நடராசப்பெருமான் திருவடி வாழ்க!

சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம், 16-5-55.
மு. மயில்வாகனம், சமயப்பிரசார அமைச்சர்.
M. 37 20, 27, 3—6—55.


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.


## மதுஒழிப்புக்குக் கண்டியில ஆதரவு

மதுவையும் குதிரைப் பந்தயத்தையும் நீக்குதற்குச் சாதகமாகக் கண்டி நகரசபை ஒரு பிரேரணையை நிறைவேற்றியுள்ளது.

=O=

## ஆசிரியர்களுடன் சேர்வார்களாம் ஆயுர்வேத வைத்தியர்

அனுராதபுரத்தில் நடந்த வடமத்திய மாகாண ஆயுர்வேத வைத்தியர் கூட்டமொன்றிலே பேசிய பேச்சாளர்கள் ஆயுர்வேத வைத்தியர்களின் பதிவு, அரசாங்க ஆயுர்வேத குறிகை ஆகியவற்றில்வேண்டிய திருத்தங்கள் செய்யாவிட்டால் தாங்கள் சுயமொழி ஆசிரியர்களுடன் சேர்ந்து போராடுவதாகக் கூறினர்களாம்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இணுவில் தற்போது அங்குலானை
1 பொன்னம்பலம் இராமனுதனும் பெண்
2. சின்னம்மாவம்
வழக்காளிகள்
இல 11328
எதிராக
இணுவில் தெற்கு சுன்னுகம்
1. அருணுசலம் சுப்பிரமணியமும் பெண்
2. செல்லம்மாவும்,
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 11328 ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1955ஹு ஆடி மீ 12 உ செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிகள் விபரம்

1. உடுவில் இறை எல்ல முக்கலை கி. பரப்பு 10ம் அதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு சின்னத்தம்பி பெண் சிதம்பரத்துக்குடைய வாதனமும் ஆனந்தர் பெண் அன்னம்மாவுக்குடையவாதனமும் வடக்கு ஒழுங்கையும் சின்னத்தம்பி வயித்திலிங்கத்திற்குடைய வாதனமும் மேற்கு சின்னத்தம்பி வைத்தியலிங்கத்துக்கும் இராசரத்தினம் பெண் செல்லம்மாவுக்குமுடைய வாதனங்களும். தெற்கு சின்னத்தம்பி வைத்தியலிங்கத்துக்குடைய வாதனம். இந்தெல்லைப்படி இந்தக் காணியடங்கலும் இதன் எல்லையிலிருக்கும் கிணற்றில் உள்ளபங்கும் அதாவது அயலில் உள்ள காணியின் கிணற்றுப்பங்கு. இக் காணி K 241/45ம் புத்தகத்தில் பதியப்பட்டது.

2. உடுவில் இறை அம்புலயப்புலம் கீ பரப்பு 11 ம வடமேற்குப் பக்கத்தில் $1\frac{1}{4}$ பரப்பிலுள்ள கிணற்றுப்பங்கும் தார்வை நிலமும் எக்லைகிழக்கு ஒழுங்கை, வடக்கு சின்னத்தம்பி சுப்பையாவுக்கும் பங்காளருக்கு முடையவாதனங்கள், மேற்கு ஆனந்தர் பெண் அன்னம்மாவுக்குடையவாதனம். தெற்கு சிற்றம்பலம பெண் சிதம்பரத்தினுதனம். இந்தெல்லைப்படி இக் காணியடங்கலிற் சொரியலாய் 6 பரப்பும் அதைச்சேர்ந்தவைகளும்.

இக்காணி K 241/46 ம் புத்தகத்தில் பதியபபட்டிருக்கிறது.

வேறு விபரம் அறியவிரும்பினுல் கனம்தங்கிய பிறக்டர் அச்சுவேலி எஸ். பாலசிங்கமவர்களிடம் அறிந்துகொள்ளலாம்.

S. Ratnasabapathy,
கொம்மிஷனர்
வெந்திஸ்மேஸ்தர்
51, 4th Cross Street
Jaffna, 31 5-55.
M. 48 3—6 (அ. 200)


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarpannai. [...] Friday June 3, 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org